**சரிதா (அபிலாக்ஷா)**

**வழக்கும் தீர்ப்பும்**




நடிகை சரிதா சாதாரண அபிலாஷாவாக இருந்தபோது தன்னைத் திருமணம் செய்துகொண்டு ஒன்றாக வாழ்ந்ததாகவும் ,பிறகு சினிமா அபிலாஷைகள் ஏற்பட்டு வாய்ப்பும் கிடைத்த பிறகு பிரிந்து விட்டதாகவும் இனி இருவரும் சேர்ந்து வாழ கோர்ட்டார் உத்தரவிட வேண்டுமென்றும் கோரி, கடப்பை வெங்கடசுப்பையா வழக்கு போட்டது, அந்த வழக்கில் சரிதாவுக்குச் சாதகமாகத் தீர்ப்பு அமைந்திருப்பது எல்லாம் தெரிந்ததே!

ஆந்திர உயர்நீதிமன்ற நீதிபதி பி. ஏ. சௌத்ரி இந்த வழக்கில் கொடுத்துள்ள தீர்ப்பு சரித்திர பூர்வமானது. அது ஒரே ஒரு சரிதாவுக்கு மட்டும் சாதகமாக அமையக்கூடிய தீர்ப்பல்ல. ஏராளமான பெண்கள் ஆண்களுக்கு நிகரான சம உரிமைகளைப் பெறுவதில் அவர்களுக்கு உதவி செய்வதாக இந்தத் தீர்ப்பு அமைந்திருக்கிறது.

பெண்களைக் கொடுமைப்படுத்துவதாக -- குறிப்பாக, விருப்பத்துக்கு மாறான திருமணங்களில் மாட்டிக் கொண்ட பெண்களுக்குக் கொடுமையானதாக அமைவது அவர்களின் உடம்பை (கட்டாயப்படுத்தி) ஆண்கள் (கணவர்கள்) பயன்படுத்திக் கொள்வதுதான்.

ஒவ்வொரு பெண்ணுக்கும் தன் உடம்பின் மீது, முழு உரிமையும் சுதந்திரமும் உண்டு என்ற மிக முக்கியமான விஷயத்தை நீதிபதி சௌத்ரி சட்டப்படி நிலைநிறுத்தியிருக்கிறார். அதே போல், உடலுறவு கொள்வதில் ,எந்த ஆணையும் சரி, பெண்ணையும் சரி, கட்டாயப்படுத்துவது அடிப்படை மனித சுதந்திரத்துக்கே எதிரானது என்ற கோட்பாட்டையும் சௌத்ரியின் தீர்ப்பு உரத்த குரலில் பிரகடனம் செய்கிறது.

அப்படியானால் இதுவரை சட்டப்படி இருந்த நிலை என்ன? திருமணமானவர்களில் இருவரில் ஒருவரின் விருப்பத்துக்கு மாறாக உடலுறவு கொள்வதை நியாயப்படுத்தும் விதத்திலா சட்டம் இருந்து வந்தது என்ற கேள்வி எழுகிறது. அப்படி 'காட்டுமிராண்டித்தனமாகத்தான் இருந்து

வந்திருக்கிறது என்பது நீதிபதி சௌத்ரி இந்து திருமண சட்டத்தின் 9-ம் பிரிவைத் தூக்கி எறிகிறபோது தான் தெரிகிறது.

அந்தப் பிரிவைப் பார்க்கலாம். ''நியாயமான காரணம் ஏதும் இல்லாமல் கணவனோ, மனைவியோ மற்றவரை விட்டுப் பிரிந்து சென்று விட்டால், அவர் திரும்பி வந்து தன்னுடன் வாழ வேண்டும்'' என்று தாம்பத்ய உரிமைகளைக் (உடலுறவு உட்பட இல்லற உரிமைகளைக்) கோருகிற உரிமையை இந்தப் பிரிவு வழங்குகிறது.

இந்தப் பிரிவின்கீழ்தான் வெங்கடசுப்பையா, கடப்பை சப்--ஜட்ஜ் முன்பு வழக்கு போட்டார். 1975 டிசம்பரில் திருப்பதியில் தனக்கும் அபிலாஷா (சரிதா)வுக்கும் திருமணம் நடந்தபின், கடப்பையில் தாங்கள் ஆறு மாத காலம் சேர்ந்து வாழ்ந்ததாக அவர் கூறினார். பிறகு சென்னைக்கு இருவரும் வந்ததாகவும், அங்கே அபிலாஷா சினிமாவில் சேர முயற்சித்திதால் மன வேறுபாடு ஏற்பட்டுப் பிரிந்ததாகவும் வெங்கடசுப்பையா தெரிவித்தார். தன்னை விட்டுப் பிரிந்துவிட்ட ஒரு மனைவியுடன் தான் மீண்டும் சேர்ந்து வாழ விரும்புவதால் தான் இழந்த தாம்பத்ய உரிமைகளை இந்து, திருமண சட்டம் (1955) செக்ஷன் 9-ன் கீழ் மீட்டுத் தரும்படி அவர் கோரினார்.

'இந்த வழக்கை விசாரிக்க கடப்பை சப்--ஜட்ஜுக்கு அதிகார வரம்பே கிடையாது. ஏனென்றால் தானும் வெங்கடசுப்பையாவும் கடைசியாக ஒன்றாக வாழ்ந்த இடம் சென்னைதான். அங்கேயுள்ள கோர்ட்தான் இதை விசாரிக்க உரிமை உண்டு' என்று சரிதா தரப்பில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இதை கடப்பை சப்-ஜட்ஜ் ஏற்கவில்லை.

சப்-ஜட்ஜின் உத்தரவை எதிர்த்து சரிதா ஆந்திர உயர் நீதிமன்றத்துக்கு மனு செய்தார். வழக்கை கடப்பையிலிருந்து சென்னைக்கு மாற்ற வேண்டும் என்பது ஒரு கோரிக்கை. மற்றொரு கோரிக்கை திருமண சட்டத்தின் 9-ம் பிரிவைப் பயன்படுத்தி, தன்னை (தன் விருப்பத்துக்கு மாறாக) கணவரோடு சேர்ந்து வாழ உத்தரவிட்டால் அது அரசியல் சட்டத்தில் 14,21 பிரிவுகளில் தரப்பட்டுள்ள தனி நபர் சுதந்திரத்தில் தலையிடுவதாகிறது. அரசியல் சட்டத்துக்கு முரணாக உள்ள திருமன சட்டம் செக்ஷன்-9 செல்லாது என்று அறிவிக்கும்படி சரிதா கோரினார்.

இதை விசாரித்த நீதிபதி சௌத்ரி, சரிதாவின் முதல் கோரிக்கையை நிராகரித்தார். கடைசியாக கணவருடன் இருந்த இடமாக சென்னையைக் கருத முடியாது. கணவரோடு தாற்காலிகமாக ஒரு ஊருக்குச் சென்றிருந்தால் அது கடைசி இடமாகாது. ஒன்றாகக் குடும்பம் நடத்திய கடைசி இடம் கடப்பைதான் என்பதால், வழக்கை விசாரிக்கும் அதிகாரம் கடப்பை சப்--ஜட்ஜுக்கு உண்டு என்று சௌத்ரி கூறினார்.

சரிதாவின் இரண்டாவது கோரிக்கையை சௌத்ரி ஏற்றுக் கொண்டு செக்ஷன் ஒன்பது செல்லாது என்று அறிவித்து விட்டார். தாம்பத்ய உரிமைகளை (Conjugal rights) மீட்டுத் தர கோரும் உரிமையே கிடையாது என்றாகி விட்டதால் , கடப்பை சப்--ஜட்ஜ் முன்னால் உள்ள வெங்கடசுப்பையாவின் வழக்கின் அடிப்படையே போய்விட்டது. சட்டத்தில், விவாகரத்துக்குக் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குப் பிரிந்திருந்து வாழ்ந்து விட்டதால், விவாகம் ரத்தாகி

விட்டதாகக் கோரி சரிதா இனி மனு தரலாம். இனி வெங்கட சுப்பையா அதிகபட்சம் செய்யக்கூடியதெல்லாம் அபிலாஷாவின் வருவாயை நம்பியே , தான் வாழ்ந்து வந்திருந்ததாக நிரூபிக்க முடிந்தால் தனக்கு ஜீவனாம்சம் தரும்படி கேட்கலாம்.

நீதிபதி சௌத்ரியின் தீர்ப்புக்கு வரலாம், இதுவரை இந்து திருமண சட்டத்தின் 9-ம் பிரிவு அமலில் இருந்துவந்த நிலைமைப்படி தாம்பத்ய உரிமைகளை மீண்டும் வழங்க கோர்ட்டுக்கு அதிகாரம் இருந்தது. தாம்பத்ய உரிமைகளில் முக்கியமானது உடலுறவு கொள்ளுதல். சேர்ந்து வாழ விரும்பாமல் பிரிந்து சென்றுவிட்ட மனைவிக்கு (கணவனின் மனு அடிப்படையில்) திரும்பச் சேர்ந்து வாழச் சொல்லி கோர்ட் உத்தரவிட்டால் என்ன ஆகும்? மீண்டும் தாம்பத்ய உரிமை பெற்றுவிட்ட கணவன் (தன்னை விரும்பாத) மனைவியைத் தன்னோடு உடலுறவு கொள்ளும்படி, கட்டாயப்படுத்தலாம் என்றாகி விடுகிறது.

இப்படிக் கட்டாயப்படுத்துவது காட்டுமிராண்டித்தனம்; நாகரிகத்துக்குச் சம்பந்தமில்லாதது. இதைச் செய்வதற்கு சட்டமே அனுமதி தரும் விதத்தில் அமைந்திருப்பது தவறு என்று நீதிபதி சௌத்ரி கடுமையாகவே சொல்லியிருக்கிறார்.

ஒவ்வொரு பெண்ணுக்கும் தன் உடம்பைப் பற்றிய முழு உரிமையும் இருக்கிறது. அதில் தலையிட்டு விருப்பத்துக்குமாறாகக் கட்டாயப்படுத்தி உடலுறவு கொள்ளச் சொல்வது சித்ரவதைக்குச் சமம் என்றார் சௌத்ரி. மனம் ஒப்பாமல் இதில் ஈடுபட முடியாது. சட்டம் எப்படி இதில் நுழைந்து கட்டாயப்படுத்த முடியும்? அப்படிச் செய்வது அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்ட தனி மனிதச் சுதந்திரத்துக்கு விரோதமானதுதான் என்று சௌத்ரி சுட்டிக் காட்டி செக்ஷன் ஒன்பதை ரத்து செய்துள்ளார்.

கணவனோடு வாழப் பிடிக்காமல் பிரிந்து செல்ல விரும்பி அவ்வாறு போய்விட்ட பெண்களுக்கு இந்தத் தீர்ப்பு நிச்சயமாகப் பெரிய நிம்மதியைத் தரும். அவர்களை மீண்டும் கணவனோடு வாழச் சொல்லி சட்டப்படி கட்டாயப்படுத்தும் நிலமை இனி இருக்க முடியாது என்றாகி விட்டது.

"தன்னை ஒதுக்கிவிட்டுப் பிரிந்து போய்விட்ட கணவனோடு மீண்டும் சேர்ந்து வாழ விரும்பும் பெண்ணின் நிலைமை இனி என்ன? அந்தப் பெண்ணும் செக்ஷன் 9-ன் கீழ் தாம்பத்ய உரிமைகளை மீட்டுத் தரும்படி கோர முடியாது என்றாகி விட்டது. இதில் வருத்தப்பட ஏதும் இல்லை. ஏனென்றால், அவள் விரும்பாத கணவனுடன் சேர்ந்து வாழ அவள் விரும்பினாலும், அவளோடு வாழும்படி கோர்ட் உத்தரவிட்டாலும், நடைமுறையில் அந்த வாழ்க்கை எப்படியிருக்கும்? கோர்ட் உத்தரவுக்குப் பயந்துகொண்டு அன்பு வந்துவிடப் போவதில்லை. மாறாகக் கொடுமைகள் அதிகரிப்பது தான் நடக்கும்.

அன்பை உத்தரவால் வரவழைக்க முடியாவிட்டால் போகட்டும். நம்பி வந்தவளுக்கு உடை, உணவு, வீடு தர வேண்டிய கடமையைச் செய்யாமல் புறக்கணிக்கிற கணவனைப் பிரிந்து போக விட்டுவிடுவதா என்று கேட்கத் தோன்றலாம். செக்ஷன் 9 ரத்தாவதால் இந்தச் சிக்கல் எழப் போவதில்லை. ஏனென்றால், ஜீவனாம்சம் பெறுவதற்கான பிரிவுகள் தனியே. கிரிமினல் ப்ரொசீஜர் கோடில் பத்திரமாக இருக்கின்றன.

செக்ஷன் ஒன்பது செல்லாமற் போய் விட்டதால் ஏற்படும் விளைவு ஒன்றே ஒன்றுதான். இதுவரை விவாகரத்து பெற விரும்பியவர்கள் முதலில் பிரிந்து வாழ்ந்து காட்ட வேண்டியிருந்தது. ஏன் பிரிய விரும்புகிறார்கள் என்ற காரணம் காட்ட வேண்டியிருந்தது, இருவரில் ஒருவர் பிரிய விரும்பியதை மற்றவர் எதிர்த்தால் மீண்டும் (செக்ஷன் 9-ன்படி) சேர்ந்து வாழ வேண்டியிருந்தது. அப்படி வாழ்ந்து பார்த்தும் ஒன்றாக வாழ முடியாவிட்டால் தாம்பத்ய உரிமைகளை அனுபவிக்க முடியாத நிலையிருந்தால் அதைக் காரணம் காட்டியே **(செக்ஷன் 13-1-A-ன் கீழ்)** விவாகரத்து கேட்கலாம். அதன் பிறகு சட்டப்படி பிரிதலுக்கான அங்கீகாரமும் விவாகரத்தும் வழங்கப்பட்டு வந்தன. பிரிந்தவர்கள் நடுவே சேர்ந்து வாழ்ந்து பார்க்கவேண்டும். என்பதை விருப்பத்துக்கு மாறாக நிர்ப்பந்திக்கும் நிலைமை இனிமேல் இல்லை, இதுதான் செக்ஷன் 9 ரத்தானதன் விளைவு . எனவே, நடுவே இணைந்து வாழ்ந்து பார்த்துப் பயன் ஏற்படவில்லை என்பதைக் காட்டி விவாகரத்து கோரும் **13-1-4** செக்ஷனும். அர்த்தமிழந்து விட்டது.

பொதுவாக நம் சமூகத்தில் விவாகரத்து என்பதன் அவசியத்தைப் புரிந்துகொள்ளும் மனப்பான்மை பரவலாக அதிகரித்து வருகிறது. இரண்டு பேர் மனம் ஒப்பி கருத்தொருமித்து வாழ்க்கை நடத்த முடியாவிட்டால் போலியாக நாடகமாடிக் கொண்டு, உள்ளுக்குள் குமைந்து கொண்டு, வாழ்க்கையைச் சுமையாகச் சுமந்து கொண்டு உயிரோடு இருப்பதில் அர்த்தமில்லை; அதைவிடப் பிரிந்து போய் தாங்கள் விரும்பும் விதத்தில் வாழ்க்கையை நடத்தலாம் என்ற சிந்தனை முன்பைவிட அதிகமாகியிருக்கிறது. திருமணங்கள் தோல்வியடைவது எப்போது? தோல்வியடைய விடாமல் முன்கூட்டித் தடுப்பதற்கு அணுகுமுறை எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றியெல்லாம் யோசித்துப் பார்க்கும் பொறுப்புணர்ச்சியும் ஒரு பக்கம் அதிகரித்திருக்கிறது. "

அதே சமயம் இன்னொரு பக்கம் விவாகரத்து என்பது இன்னமும் ஏதோ ஒரு கெட்ட வார்த்தையாகக் கருதப்படும் சூழ்நிலை இருக்கத்தான் செய்கிறது. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. பெண்ணின் முக்கிய பணி மனைவியாக, குடும்பத்தைப் பார்த்துக் கொள்பவளாக இருப்பதுதான் என்ற பார்வை அதிகமாக மாறாத நிலையில் ,பெண்கள் வேலைக்குப் போவது என்பதே பெரிய புரட்சியாக ஆகிவிட்டது. அப்படி வேலைக்குச் செல்லும் பெண்கள்கூட அதிக காலம் தனியே வாழ விரும்பினால் அதை அனுமதிக்கக் கூடிய பார்வை இல்லை.

பெண்ணுக்கு வாழ்க்கையின் இறுதி லட்சியம் திருமணம்தான் என்று கருதுகிற சமூகத்தில், திருமணத்தை முறிக்க விரும்புவது பெரிய குற்றமாகத் தோன்றுகிறது. இந்தப் பார்வைகள் மெல்ல மெல்ல மாறிக்கொண்டுதான் வருகின்றன.

விவாகரத்தைப் பற்றி இழிவான கருத்து நிலவுவதற்கு முக்கிய காரணம் மதரீதியிலான நம்பிக்கைதான். பல்லாயிரம் ஆண்டு காலமாகத் திருமணம் என்பது மனிதர்களுக்கு அப்பாற்பட்ட புனிதமான உறவாகக் கருதப்பட்டு வருகிறது. ‘இறைவன் சேர்த்து வைத்ததை மனிதன் பிரிக்காமல் இருப்பானாக’ என்று பார்வைதான் ,இந்து மதத்தில் (கிறித்துவ மதத்திலும் இதேதான்) நிலவி வருகிறது.)

திருமணம் என்பது மனிதர்களுக்கிடையே நடைபெறும் ஒரு மகிழ்ச்சிக்குரிய சமூக ஒப்பந்தம்தான். பல்வேறு காரணங்களுக்காகச் சேர்ந்து வாழ்ந்து, மகிழ்ச்சியை அனுபவிக்க விரும்புகிற ஆணும் பெண்ணும், அந்த வாழ்க்கை சுகமாக இல்லாமல் சுமையாக மாறினால் அதை மாற்றிக் கொள்வதில் எந்தத் தவறும் இல்லை.

ஆனால், இவ்வாறு திருமணத்தைப் பார்க்கக்கூடிய சூழ்நிலை இன்னும் பரவலாக ஏற்படாத நிலையில் இந்து திருமண சட்டம் இன்னமும் ஓரளவு பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறது.

இதற்கு ஆதாரமாக ஒரே ஒரு விஷயமே போதும். 1955-ல் இந்து திருமண சட்டம் உருவாக்கப்பட்டது. அதற்குப் பல காலம் முன்பிருந்தே இருந்து வருகிறது, ஆனால் கணவன், மனைவி இருவருமே ஒப்புக்கொண்டு பிரிந்து போய்விட விரும்பினால் விவாகரத்து பெறலாம் என்ற சட்ட விதி எப்போது வந்தது தெரியுமா? 1976-ல் தான்! இருவருமே பரஸ்புரம் ஒப்புக்கொண்டு பிரிந்து போவதை அனுமதிக்காமல்தான் அதுவரை சட்டம் இருந்து வந்தது. கருத்து வேறுபாடுகள், ரசனை வித்தியாசங்கள், கொள்கை மாறுபாடுகள் முதலியவற்றின் காரணமாக விவாகரத்து கோரும் உரிமை இல்லை. கணவன்--மனைவி உறவில் கணவனுக்கே மேலாதிக்கம் இருந்து வந்த காலம்வரை இதற்கு அவசியம் இல்லாமல் இருந்தது. ஏனென்றால், மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும், அவற்றை வெளியே காட்டிக் கொள்ளாமல், தனக்கென்று தனி வாழ்க்கை இனி இல்லை என்று கருதுபவளாகத்தான் ஒரு பெண் திருமணமான பிறகு நடந்து கொள்ள வேண்டும் என்று, நினைக்கிற., மறைமுகமாகவும் நேரடியாகவும் நிர்ப்பந்திக்கிற சமூகமாக நாம் இருந்து வந்திருக்கிறோம். இப்போது பெண்கள், ஆண்கள் இடையே ஏற்றத் தாழ்வை நீக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு பெருகி வரும் நிலையில் இந்து திருமண சட்டத்தில் புதிய திருத்தங்களைச் செய்ய முயற்சி நடக்கிறது.

அதில் ஒரு முன்னேற்றப் படியாகத்தான் ஆந்திர நீதிபதி சௌத்ரியின் தீர்ப்பும் வந்திருக்கிறது.

அதே சமயம் நீதிபதி சௌத்ரி இந்து திருமண சட்டத்தின் 9--வது பிரிவை ரத்து செய்திருப்பது அந்த உயர் நீதிமன்ற எல்லைக்குள் மட்டும்தான் செல்லுபடியாகும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். சென்னை உயர்நீதிமன்ற எல்லைக்குட்பட்ட தமிழ்நாட்டிலும் ,மற்ற நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும்) இப்போதும் செக்ஷன்-9 அமலில்தான் இருக்கிறது. நீதிபதி சௌத்ரியின் வார்த்தையில் சொல்வதானால் தமிழ்நாட்டிலும் மற்ற பகுதிகளிலும் தாம்பத்ய உரிமைகள் வழங்கப்பட்டு அதன்படி கட்டாயமாக உடலுறவு கொள்ள வேண்டிய, சித்ரவதைக்கு ஒப்பான, மனிதத்தன்மையற்ற நிலைமை சட்டப்படி நியாயமானதாகவே இருக்கும்.

இது என்ன புதுக் குழப்பம்? இது புதுக் குழப்பம் இல்லை. இந்தியாவில் உள்ள பல்வேறு உயர் நீதிமன்றங்கள் தரும் தீர்ப்புகளின் கதி சட்டப்படி இது தான், இந்த மாதிரி சட்டச் சிக்கல்கள் ஒவ்வொரு கட்டத்திலும் சுப்ரீம் கோர்ட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே முடிவாகிறபோதுதான் அது நாடு முழுவதுக்கும் பொருந்தும்!

எப்படிப் பார்த்தாலும் சரிதாவுக்குச் சாதகமான தீர்ப்புதான். இந்து திருமண சட்டத்தின் செக்ஷன் ஒன்பது ஒழிக்கப்பட்டது (ஆந்திரப்) பெண்களுக்கெல்லாம் சாதகமான விஷயம். இது எல்லா

இந்திய இந்துப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் மகிழ்ச்சியைத் தரும் விஷயமாகவும் மாறுமா என்பது வெங்கடசுப்பையா மேற்கொண்டு அப்பீல் செய்தால்) சுப்ரீம் கோர்ட்டில் முடிவாகிறபோது தெரியும்!

**--ஞாநி.**

**ஜீனியர் விகடன்**
**13.7.1983**